வெற்றிக் களிப்பில் இந்திய வீரர்கள்

கோப்பை ஹாக்கி

# தை வீழ்த்தியது இந்தியா

## எஸ்.வி.சுநீல் 200



நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் விளை யாடியதன் மூலம் 200 சர்வதேசப் போட்டிகளில் விளையாடியவர் என்ற பெருமையைப் பெற்றுள் ளார் இந்திய ஹாக்கி வீரர் எஸ்.வி.சுநீல்.

2007-இல் சென்னையில் நடைபெற்ற ஆசிய கோப்பை போட்டியில் அறிமுக வீரராக களம் கண்ட சுநீல், 2008-இல் நடைபெற்ற அஸ்லான் ஷா கோப்பை போட் டியில் வெள்ளி வென்ற இந்திய அணியிலும் இடம்பிடித்தார்.

2011-இல் நடைபெற்ற சாம்பியன்ஸ் சேலஞ்ச் போட்டியில் 3 கோல்களை அடித்ததன் மூலம் புகழின் உச்சத்தைத் தொட்ட சுநீல், கடந்த ஆண்டு லண்டனில் நடைபெற்ற சாம்பியன்ஸ் டிராபி போட் டியில் இந்திய அணி வெள்ளிப் பதக்கம் வென்றதில் முக்கியப் பங் காற்றியது குறிப்பிடத்தக்கது.

இந்திய அணியின் நம்பிக்கைக்குரிய வீரரான சுநீல், கடந்த ஆண்டு ஆசியாவின் சிறந்த ஹாக்கி வீரருக்கான விருதை வென் றார். இதுதவிர 2014 ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற இந்திய அணி, 2015 உலக ஹாக்கி லீக் பைனல் போட்டியில் வெண்கலம் வென்ற இந்திய அணி ஆகியவற்றிலும் இடம்பிடித் துள்ளார். 2012, 2016 ஆகிய இரு ஒலிம்பிக் போட்டிகளில் இந்திய அணிக்காக விளையாடியுள்ளார். 200 போட்டிகளில் விளையாடிய வர் என்ற சாதனையை படைத்திருக்கும் சுநீலுக்கு ஹாக்கி இந்தியா பொதுச் செயலர் முஷ்டாக் அஹமது வாழ்த்து தெரிவித்துள்ளார்.

